செ.வெ.எண்: 77 நாள்:30.08.2019

**கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், பேரிடர் காலங்களில் பணியாற்றக் கூடிய முதல் பொறுப்பாளர்களின் பணிகள் குறித்த கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று(30.08.2019) நடைபெற்றது.**

கிராம அளவிலான முதல் பொறுப்பாள்களின் அலுவலர்களின் தொலைபேசி எண்களை பெற்று தயார்நிலையில் இருக்க வேண்டும்.தற்காலிக நிவாரண முகாம்கள் முழுமையாக தணிக்கை செய்து தயார் நிலையில் உள்ளதா என்பதை உறுதி செய்துக்கொள்ளவேண்டும். அலுவலர்கள் புதியதாக VULNERABLE AREA ஏதும் கண்டறியப்பட்டால் அவற்றின் விபரங்களை உடனடியாக முதல் பொறுப்பாளர்களுக்கு தெரியப்படுத்தவேண்டும்.அனைத்து VULNERABLE AREA பகுதிகளுக்கும் தேவையான அளவிற்கு நிவாரண முகாம்களை கண்டறிந்து அவற்றை முழுமையான அளவில் தயார் செய்யவேண்டும். கிராம அளவில் முதல் பொறுப்பாளர்கள் அனைவரும் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை அலுவலர்கள் மூலம் உரிய பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

முதல் பொறுப்பாளர்கள் மற்றும் அனைத்து குழுக்களிலும் பெண்கள்/தன்னார்வலர்கள் உள்ளனரா என்பதை உறுதி செய்துக்கொள்ளவேண்டும். வட்ட அளவில் பாம்புகள் பிடிக்கும் நபர்களின் விபரங்களை முதல் பொறுப்பாளர்கள் வைத்திருக்கவேண்டும். மோட்டார் படகுகள்/ பரிசல்கள் விபரங்களை முதல் பொறுப்பாளர்கள் தெரிந்து வைத்துக்கொள்ளவேண்டும். அவசரகால சூழ்நிலைகளில் பங்கெடுத்து பணியாற்றும் வகையில் தனியார் நிறுவனங்கள், மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள், தகவல் தொடர்பு நிறுவனங்கள், ஆயில் கார்பேரஷன் நிறுவனங்கள் ஆகியோர்களின் அழைபேசி எண்கள் தெரிந்து வைத்துக்கொள்ளவேண்டும்.பேரிடர் மீட்பு மற்றும் வெளியேற்றுதல் பணிகளுக்கு தேவையான சாதனைகள், JCB, மரஅறுவை இயந்திரங்கள், வாகனங்கள், மோட்டார் படகுகள், பரிசல்கள் மற்றும் அவற்றின் இருப்பிடம் மற்றும் உரிமையாளர் விபரங்கள் முதல் பொறுப்பாளர்கள் தெரிந்து வைத்துக்கொள்ளவேண்டும்.

உயர் மின்விளக்குகள், மோட்டார் பம்பு செட்டுகள், டீசல் ஜெனரேட்டர், மற்றும் அவற்றின் இருப்பிடம் மற்றும் உரிமையாளர் அல்லது அமைப்புகளின் விபரங்களை முதல் பொறப்பாளர்கள் தெரிந்து வைத்துக்கொள்ளவேண்டும்.மணல் மூட்டைகள் மற்றும் சவுக்கு கட்டைகள் அவை உள்ள இருப்பிடம் மற்றும் பொறுப்பு அலுவலர்/உரிமையாளர் விபரங்கள் தயார் நிலையில் இருப்பதை முதல் பொறுப்பாளர்கள் உறுதி செய்துக்கொள்ளவேண்டும். VULNERABLE AREA தவிர மற்ற கிராமங்கள்/ வார்டுகளில் உள்ள முதல் பொறுப்பாளர்கள்/ தன்னார்வலர் அமைப்புகளை சார்ந்தவர்களை தொடர்பு விபரங்களை தயார்நிலையில் வைத்திருக்கவேண்டும்.

VULNERABLE AREA பகுதிகளில் செய்தி வெளியீடு, தகவல் தொடர்பு மற்றும் சமூக வலைதளங்கள் (SOCAIL MEDIA) மூலம் நம்பகதன்மை வாய்ந்த எச்சரிக்கை செய்திகளை பரிமாற்றங்கள் முதல் பொறுப்பாளர்கள் தெரிந்துகொள்ளவேண்டும். ஒலிபெருக்கி பொருத்திய வாகனங்கள் மூலம் பொதுமக்களுக்கு முறையான முன்னெச்சரிக்கை அறிவிப்புகளை செய்யவேண்டும். பெரும் மதிப்புக்குள்ளான பகுதிகளில் இறந்த மனித உடல்கள மற்றும் கால்நடைகளின் உடல்களை மீட்க தனி குழுவினருடன் முதல் பொறுப்பாளர்கள் தேசிய பேரிடர் மீட்பு/ மாநில பேரிடர் மீட்புக் குழுவின் அறிவுரையகளின்படி மீட்க வேண்டும்.

இந்நிகழ்ச்சயில் தனி வட்டாச்சியர் (பேரிடர் மேலாண்மை) திரு.மதுச்செழியன், கிராம அளவிலான முதல்நிலை மகளிர் பொறுப்பாளர்கள் 100 பேர் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கிருஷ்ணகிரி.**